பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 19 வியாழக்கிழமை 03.03.2022 கதிர் 344

## மின்வெட்டுத் தவிர்க்கப்படும் உறுதி கூறுகிறார் கோட்டா!

மின்வெட்டை தவிர்ப்பதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். ஜனாதிபதி இந்த உறுதி மொழியை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் பொதுமக்களுக்கு வழங்கியுள்ளார்.


இந்நிலையில், மின்சார உற்பத்திக்கு 2

# பழிவாங்கலைக் கோரவில்லை நீதியைத்தான் வேண்டுகிறோம்!

## சர்வதேச சமூகத்தின் கடப்பாட்டை நினைவூட்டி சம்பந்தன் எடுத்துரைப்பு

தமிழர்களாகிய நாம் பழிவாங்கலை நாடவில்லை. மாறாக பொறுப்புக் கூறல், நல்லிணக்கம், மீள்நிகழாமை மற்றும் தொடரும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறாமல் தடுக்கப்படுகின்றமை போன்றவற்றை உறுதி செய்யுமாறே வேண்டுகின்றோம்.உண்மை நிலைநாட்டப்படவேண்டும் என வலியுறுத்துகிறோம். உண்மை உறுதி செய்யப்படாமல் நீதி நிலைநாட்டப்பட முடியாது.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான.இரா. சம்பந்தன்.



2

## யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா கோலாகலமாக இன்று ஆரம்பமாகியது!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச்.03

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவத்தின் இரண்டாவது நிலை அமர்வு பல்கலைக்கழகத்தின் உள்ளக விளையாட்டரங்கில் யாழ். பல்கலைக்கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தலைமையில்,துணைவேந்தர்பேராசிரியர்சி.சிறிசற்குணராஜாவின் வழிகாட்டலுடன் இன்று கோலாகலமாக ஆரம்பாகியது.

இன்று முதல் நாளை மறுதினம் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பட்டமளிப்பு வைபவத்தின் 2

## மேல் நீதிமன்ற நீதிபதிகளாக 13 பேருக்கு புதிய நியமனம்!

### தமிழர் ஒருவரும் அதில் இல்லை



மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்ட 13 பேருக்கு ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

சேவை மூப்பு சிரேஷ்ட நிலையின் அடிப்படையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. இந்த 13 புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவர் கூடத் தமிழர் இல்லை.

## மன்னார் நடுக்குடாக் காட்டில் 60 ஆயிரம் மாத்திரைகள் மீட்பு



தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நடுக்குடா காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி மாத்திரைகளை இராணுவத்தினர் 2

## மட்டு., யாழில் இன்று இரவு மெழுவர்த்திப் போராட்டம்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மார்ச்03

நாட்டில் பரவலாக மேற்கொள்ளப்படும் பல மணிநேர மின்சாரத் தடைக்கு எதிராக மெழுகுவர்த்தி போராட்டத்திற்கு கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இன்று இரவு 8.30 மணியளவில் -

வடக்கில் யாழ்ப்பாணம் செம்மணி ஏ - 9 வீதி சந்தியிலும், கிழக்கில் மட்டக்களப்பில் பெரியகல்லாறையும், கோட்டைக்கல்லாறையும் இணைக்கும் பாலத்தை ஒட்டியும் - இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. 2

## சர்வதேச நீதிமன்றில் ரஷ்யாவின் மீது போர்க்குற்ற வழக்கு; கனடா முஸ்தீபு

ரஷ்யாவுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவுள்ளதாக கனடா தெரிவித்துள்ளது.

கீவ் மற்றும் கார்கிவ் நகரங்களில் பொதுமக்கள் மீது குண்டுகள் வீசப்பட்டுள்ள நிலையில், ரஷ்யாவுக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

உக்ரைன் அரசின் முறைப்பாட்டை அடுத்து கனடா சார்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## யாழ். ஒருங்கிணைப்புக் குழுவில் பிரதமரின் பிரதிநிதியாக கீதநாத்

(எஸ்.நிதர்ஷன்)



யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிலும், யாழ்மாவட்டத்தில் உள்ள ஒவ்வொருபிரதேசசெயலர் பிரிவுக்குமான ஒருங்கிணைப்புக்குழுக்களிலும் பிரதமர்மஹிந்தராஜபக்ஷவின் பிரதிநிதியாக கீதநாத் காசிலிங்கம் பிரதமரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமரின் இணைப்புச் செயலாளராகவும், பிரதமரின் கீழ் வரும் மீள்குடியேற்ற 2

## உதைபந்தாட்ட வீரர் பியூஸலஸின் பூதவுடல் இலங்கை வந்து சேர்ந்தது



மாலைதீவில் கடந்த 26 ஆம் திகதி மரணமடைந்த இலங்கை தேசிய உதைபந்தாட்ட வீரர் டக்சன் பியூஸ்லஸின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச 2



### மன்னார் நடுக்குடாக் காட்டில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அதிகாலை மீட்டுள்ளனர்.

மன்னார் இராணுவ புலனாய்வாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், நடுக்குடா இராணுவத்தினரின் உதவியுடன் இன்று அதிகாலை நடுக்குடா காட்டுப்பகுதியில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன் போது ஒரு தொகுதி மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த மாத்திரைகள் உடல் வலியைக் குறைப்பதற்கு பயன்படுத்தப்படுபவை எனத் தெரிய வந்தது. இரு பெட்டிகளில் இருந்தும் 60 ஆயிரம் மாத்திரைகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

குறித்த மாத்திரைகள் இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக கொண்டு வரப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

### மட்டு., யாழில் இன்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் இந்தப் போராட்டத்திற்கான ஏற்பாட்டை சாணக்கியன் எம்.பி. கவனிக்கின்றார்.

வடக்கில் இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ள கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மின்வெட்டுப் பிரச்சினை தொடர்பில் கூறியவை வருமாறு:-

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிடப்படாத நடவடிக்கைகள் காரணமாகவே இவ்வாறான மின்வெட்டுக்கான கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் மக்கள் அன்றாடம் பல பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றார்கள் .

அரசின் செயற்பாட்டுக்கு எதிரான இந்தப் போராட்டத்திற்கு அனைத்து மக்களும் தங்களது எதிர்ப்பினை வெளிக்காட்டும் முகமாக மெழுகுவர்த்தி மற்றும் மின்சூழ் (டோர்ச்லைட்) சகிதமாக வருகை தர வேண்டும். - என்றார்.

### யாழ். ஒருங்கிணைப்புக் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சுக்கான வடக்கு, கிழக்கு விசேட அனுசரணையாளராகவும் பணியாற்றி வந்த அவருக்கு, அந்தப் பணிகளுக்கு மேலதிகமாக இந்தப் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் நாள்களில் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாடுகள் அனைத்திலும் பிரதமரின் நேரடிக் கவனிப்பும் கட்டுப்பாடும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### உதைபந்தாட்ட வீரர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமான நிலையத்தின் ஊடாக இலங்கை வந்தடைந்தது.

இந்த நிலையில் குறித்த பூதவுடல் பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பூதவுடலை பெற்றுக் கொள்ள அவருடைய மனைவி மற்றும் குடும்பத்தினர் நீர்கொழும்பு வைத்தியசாலைக்குச் சென்றுள்ளனர்.

சடலப் பரிசோதனையின் பின் பூதவுடல் மனைவியிடம் ஒப்படைக்கப்பட உள்ள நிலையில் உடல் யாழ்ப்பாணத்துக்கு அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்படும்.

எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை மன்னார் பனங்கட்டுக் கொட்டில் உள்ள அன்னாரது இல்லத்திற்கு அஞ்சலிக்காக எடுத்து வரப்படும்.

அன்றைய தினம் யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் வரும் வழியில் பூநகரி, முழங்காவில், தேவன் பிட்டி போன்ற இடங்களைச் சேர்ந்த உதைபந்தாட்ட வீரர்கள் அவருடைய உடலுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக பூதவுடல் பவனியாக கொண்டுவரப்படும்.

எதிர்வரும் திங்கட்கிழமை மாலை மன்னார் பொது மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

மீட்கப்பட்ட மாத்திரைகளை மேலதிக நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினர் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

### யாழ் பல்கலைக்கழக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எட்டு அமர்வுகளில் 2,619 பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் பல்கலைக்கழகத்தின் யூரியூப் மற்றும் முகப்புத்தக பக்கங்களினூடாக நேரலையில் ஒளிபரப்பப்பட்டன.

(பட்டமளிப்பின் வண்ணப் படங்கள் 07, 08ஆம் பக்கத்தில்)

### பழிவாங்கலைக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கைக்கான இலங்கை அரசின் பதில் அறிக்கையும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த பின்னணியில் இவ்விடயம் தொடர்பில் சில முக்கிய காரணிகளை குறிப்பிடுவது முக்கியமானதாகும்.' - என்று தெரிவித்து சம்பந்தன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.அதன் முழு விவரம் வருமாறு:-

சிறப்பு நிபுணர் குழுவின் அறிக்கையில், குறிப்பாக இறுதி யுத்த கட்டத்தில் நம்பத்தகுந்த சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெற்றன எனவும் அவை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மை உறுதி செய்யப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை ஆணையாளரின் உள்ளக விசாரணையும் இதனையொத்த ஒரு முடிவிற்கு வந்துள்ளது.

இலங்கையின் தற்போதுள்ள அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்களும் இதுவரை எந்தவொரு விசாரணையையும் முன்னெடுக்கவில்லை. முன்னைய அரசாங்கம் முன்மொழிந்த பொறுப்புக்கூறலை உறுதி செய்யும் வகையிலான கலப்பு பொறிமுறை அடங்கிய இணை அனுசரணை பிரேரணையிலிருந்து தற்போதைய அரசாங்கமானது விலகிக் கொண்டது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை.

இலங்கை அரசாங்கமானது சுதந்திரம் அடைந்தது முதல் நீண்டகாலமாக ஆழமான தண்டனை விலக்கக் கலாச்சாரத்தில் ஊறியுள்ளது. இது தமது அரசியல் பலத்தை தொடர்ந்தும் தக்கவைப்பதற்காக - சிங்கள, பௌத்த பேரினவாதத்திற்கு ஆதரவளிக்கும் முகமாக - உள்ளக வாக்குறுதிகளை மதிக்காமலும், அதன் விளைவாக கொடுத்த வாக்குறுதிகளை செயல்படுத்துவதிலும் சரியான முடிவுகளை எடுப்பதிலும் அல்லது வேறெந்த ஒரு விடயத்திலும் தீர்மானம் எடுக்கும் நிலைகளில் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.

எல்லா அரசாங்கங்களும் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்காக பேரினவாதத்தினை ஆதரிக்கும் கொள்கைகளை முன்னிறுத்திவந்துள்ளனர். இது இலங்கை நாட்டிற்கு பாரிய பாதகங்களை கொண்டு வந்துள்ளதுடன் ஒருமித்த இலங்கை நாட்டின் மக்களையும் இது பாதித்துள்ளது. உண்மைநிலைமையை சிங்கள பௌத்த மக்களிற்கு எடுத்து கூறினால் அவர்கள் நிலைமையை புரிந்து கொள்வார்கள், ஆனால் ஒரு சில சிங்கள தலைவர்களை விட ஏனையவர்களிற்கு இதனை செய்வதற்கு தைரியம் இல்லை. இலங்கை முகங்கொடுத்துள்ள வரலாறு காணாத பிரச்சினைக்கும் மீண்டெழுந்து வரமுடியாத நிலைமைக்கும் இதுவே பிரதான காரணமாகும்.

இதேவேளை ஆயுதமேந்தாத பாதிப்பிற்குள்ளான தமிழ் மக்களின் நிலைமையை குறிப்பிடுவது முக்கியமானதாகும். இவர்கள் யுத்தத்தினால் பாதிப்பிற்குள்ளானவர்கள். ஏனையோர் பாதிப்பிற்குள்ளாக்கப்பட்டவர்கள். ஏனையவர்கள் பாதுகாப்பு படையினரிடம் சரணடைந்தவர்கள்.

மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டு பாதிப்படைந்த இந்த மக்கள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்த வேண்டுகிறார்கள்.

இவர்கள் பழிவாங்கலை நாடவில்லை. மாறாக பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மீள்நிகழாமை, மற்றும் தொடரும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறாமல் தடுக்கப்படுகின்றமை போன்றவற்றை உறுதி செய்யுமாறே வேண்டுகின்றனர்.

அவர்கள் உண்மை நிலைநாட்டப்படவேண்டும் எனக் கோருகின்றனர்.

உண்மை உறுதி செய்யப்படாமல் நீதி நிலைநாட்டப்பட முடியாது.

இலங்கை ஐக்கிய நாடுகளின் சர்வதேச உடன்படிக்கைகளை ஏற்று கொண்டுள்ளது. அத்தகைய உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவது இலங்கையின் பொறுப்பாகும்.

இதனை செய்ய தவறுவதானது தற்போது நிலவும் தண்டனை விலக்கை உறுதி செய்வதாகவே அமையும்.

தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடும், ஐக்கிய நாடுகள் சபையின் பிரேரணை மற்றும் சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் போன்றன இலங்கையில் எது நடந்தாலும் அது ஒரு உள்ளக நிகழ்வாகவும், இறையாண்மை தொடர்பான விடயமாகவும் அதில் வெளித் தலையீடுகள் இருக்க முடியாது எனவும் எண்ணுவதற்கு தூண்டுகிறது.

இலங்கையின் தண்டனை விலக்குக் கலாச்சாரமானது சர்வதேச மட்டத்திற்குக் கொண்டுசெல்ல வேண்டிய தருணத்தை எட்டியுள்ளது.

சொந்த மக்களது இறையாண்மை மதிக்கப்பட்டு, அவர்கள் சுய மரியாதை மற்றும் கௌரவம், சமத்துவம் மற்றும் நீதி, மேலும் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களில் இருந்து பாதுகாக்கப்படுகின்ற போதுதான் ஒரு நாட்டின் இறையாண்மை புனிதத்துவம் பெறுகின்றது என்பதனை குறிப்பிட வேண்டும். ஆனால் இலங்கையில் வாழும்தமிழ்மக்கள்இத்தகையநிலைமை இல்லாத நிலையில் அரைவாசிக்கும் மேலதிகமானவர்கள் கடந்த தசாப்தங்களில் பல்வேறு நாடுகளில் குடியேறியுள்ளனர்.

இந்நிலைமைதொடர்ந்தால், செழுமையான மொழியையும், கலாச்சாரத்தினையும், நாகரிகத்தினையும், பாரம்பரியத்தினையும் கொண்ட தமிழ் மக்கள் இலங்கையில் இல்லாமல் போய்விடுவார்கள். தமிழ் மக்கள் தமது பூர்வீகமான வடக்கு கிழக்கு பிரதேசங்களில் ஒன்றிணைந்த, பிரிவுபடாத இலங்கையில், அர்த்தமுள்ள அதிகார பிரயோகத்துடன் தொடர்ந்தும் வாழ விரும்புகிறார்கள். இது உறுதி செய்யப்படவேண்டியது அடிப்படையாகும்.

தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் இந்த நிலைமைக்கு தமீழீழ விடுதலைப் புலிகளேகாரணம்எனகூறுகின்றனர். ஆனால், சுதந்திரத்திற்குப் பின்னர் தமிழ் மக்களிற்கெதிரான கலவரங்கள் இடம்பெறாமல் இருந்திருந்தால், தமிழ் மக்களை இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு படையினர் பாதுகாத்திருந்தால், இலங்கை பிரதமர்களிற்கிடையிலும் தமிழ் தலைவர்களிற்கிடையிலும் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தால், தமிழ் மக்களின் சார்பில் தமீழீழ விடுதலைப் புலிகள் தோன்றியிருக்கமாட்டார்கள் என்பதனை குறிப்பிட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபைக்கும் சர்வதேச சமூகத்திற்கும் இது தொடர்பில் ஒரு பொறுப்பு உள்ளது.

சமாதானமும் மீளநிகழாமையும் இந்த விடயங்கள் யதார்த்தமாக தீர்க்கப்படவேண்டும் என வலியுறுத்துகின்றன.

- என்று உள்ளது

### மின்வெட்டுத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளை திறைசேரி மற்றும் மத்திய வங்கி எடுக்குமென இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# ஜெனிவா இம்முறையாவது நீதித் தீர்வு கிட்டுமா? காணாமல்போனோரின் உறவுகள் போராட்டம்!

**வவுனியா பழைய பஸ் நிலையத்தில் திரண்டு கோஷம்**



ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலின் இம்முறை அமர்விலாவது எமக்கான நீதி கிடைப்பதற்கு வழிபிறக்க வேண்டும் என்று வலியுறுத்தி வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினால் ஆர்ப்பாட்டம் ஒன்று வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக இன்று இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 'குடும்பங்களாகச் சரணடைந்த போது அவர்களுடன் சேர்ந்து சரணடைந்த 29 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் எங்கே?', 'யுத்த காலத்தில் மரணித்த இராணுவ உடல்களை பொறுப்பெடுக்க மறுத்த சிங்கள அரசு, அவர்களை காணாமல் ஆக்கப்பட்டோர் என அவர்களது குடும்பங்களையும் ஏமாற்றுகிறது', 'ராஜபக்ஷ குடும்பம் பேரப் பிள்ளைகளை கொஞ்சி மகிழும் போது, நாங்கள் பேரக் குழந்தைகளை தேடி வீதியிலே அழுது நிற்கின்றோம்', 'கையில் ஒப்படைத்தவர்களை போரில் இறந்து விட்டார்கள் என்று கூறுவது எங்களையும் சர்வதேசத்தையும் முட்டாளாக்கும் செயல்!, 'கொலையாளி ஜனாதிபதியாக உள்ள நாட்டில் எமக்கு எவ்வாறு நீதி கிடைக்கும்?', 'மிருசுவிலில் 8 பேரைக் கொலை செய்த படுகொலையாளியை விடுதலை செய்யத் தன் மூலம் கொலையாளிகளை ஊக்கப் படுத்தாதே' என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தமையுடன், கோஷங்களையும் எழுப்பினர்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள் -

எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டு பதின்மூன்று வருடங்கள் கடக்கின்ற நிலையில் எமக்கான நீதி தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றது. தொலைத்த எமது பிள்ளைகளைக் காணாமல் சாட்சிகளான பல தாய்மார்கள் மரணித்து விட்டனர். வயது முதிர்ந்த நிலையில் அடுத்த போராட்டத்திற்கு வருவோமா என்ற நம்பிக்கையற்ற நிலையில் இந்தப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

இலங்கையில் இனப்படுகொலை தொடர்ச்சியாக இடம்பெறாமல் தடுக்கப்பட வேண்டுமானால் ராஜபக்ஷ குடும்பமும் இனப்படுகொலைகளுக்குப் பொறுப்பாக இருந்த படைத் தளபதிகளும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டும்.

யுத்த காலத்தில் மரணித்த இராணுவத்தின் உடல்களைப் பொறுப்பெடுக்க மறுத்த சிங்கள அரசு அவர்களைக் காணாமல் ஆக்கப்பட்டோர் என தெரிவித்து அவர்களின் குடும்பங்களை ஏமாற்றுகின்றது. எனவே சர்வதேச சமூகம் எமக்கான நீதியை விரைவில் வழங்க வேண்டும். இம்முறை இடம்பெறுவரும் ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸில் அமர்விலாவது உறுதியான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு எமக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அதற்கு உறுப்பு நாடுகள் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டும். எமக்கான நீதி கிடைக்கும் வரையில் நாம் எமது போராட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவோம்.- என்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சாத்தான் ஓதும் வேதம்

பதினைந்து இருபது ஆண்டுகளாகத் தாம் கூட்டுச் சேர்ந்து இயங்கும் ராஜபக்ஷக்களின் பண்பியல்பு தெரியாதவர் போல இப்போது கருத்து வெளியிட்டிருக்கின்றார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு நிபுணர்களின் ஆலோசனையை அரசு கோர வேண்டும் என்று பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார் அவர்.

இதன் அர்த்தம் தெளிவானது. உண்மையை வெளிப்படுத்தி நிற்பது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி மிக மோசமான கட்டத்தை அடைந்துள்ளது என்பது துலாம்பரமானது. மீளவே முடியாத சிக்கல் கட்டத்தை அது எட்டிவிட்டது.

இந்தக் கட்டத்தில்தான் மேற்படி கோரிக்கையை – நிபுணர்களின் ஆலோசனையை அரசு கோர வேண்டும் என்ற வேண்டுகோளை – அமைச்சர் வீரவன்ஸ முன்வைக்கின்றார். இதன் மூலம் இரண்டு உள் விடயங்களை அவர் பிரதிபலிக்கின்றார். அவை உண்மையான – யதார்த்தமான – விடயங்கள்தான்.

ஒன்று – பொருளாதாரம் போன்ற மிக முக்கியமான விடயங்களில் சரியான நிபுணர்களின் ஆலோசனையை ராஜபக்ஷக்கள் அரசு பெற்றுக் கொள்வதில்லை என்பது பங்காளிக் கட்சி அமைச்சரின் கூற்றில் தொக்கி நிற்கின்றது.

அடுத்தது – நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கண்டு மீளுவதற்கு இன்னும் கூட சரியான நிபுணத்துவ ஆலோசனையை அரசு பெற்றுக் கொள்ளவில்லை என்பது. இனியாவது பெற்றுக் கொண்டு நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற இறைஞ்சல் அமைச்சர் வீரவன்ஸவின் கோரிக்கைக்குள் அடங்கி நிற்கின்றது.

'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' என்பார்கள். அந்த வகையறாதான் ராஜபக்ஷக்களின் ஆட்சிப் பீடமும். அத்தகைய நிலைப்பாட்டில் ராஜபக்ஷக்கள் இறுக்கமாக நின்று செயற்படுவதற்குப் பின்புலத்தில் ஆதரவும் வலிமையான ஊக்கமும் கொடுத்து உறுதியாக நின்றவர்களுள் அமைச்சர் விமல் வீரவன்ஸவும் ஒருவர்தான்.

ஆனால், இன்று பொருளாதார நிலைமை மிக மோசமான கட்டத்தை எட்டி அதனால் மக்களின் கோபமும் சீற்றமும் எரிச்சலும் ஆவேசமும் ஆட்சிப் பீடத்துக்கு எதிராகத் திரும்பும் போது, இப்போது அந்தக் குழப்பங்களுக்கான கூட்டுப்பொறுப்பிலிருந்து தம்மை விடுவித்துத் தப்புவதற்காக நிபுணத்துவ ஆலோசனை கோருங்கள் என்று கயிறு திரிக்கின்றார் அவர்.

பொருளாதார விடயங்களில் மட்டுமல்ல. யுத்தத்தில் இருந்து இனப்பிரச்சினைத் தீர்வு வரையான சகல அம்சங்களிலுமே பௌத்த – சிங்களப் பேரினவாத வெறிப் போக்கிலும், மேலாண்மைத் திமிரிலும், செருக்குடன் விடயங்களை அணுகாமல், புத்திஜீவிகள், நிபுணர்கள், துறைதோய்ந்த வல்லுநர்களின் ஆலோசனைகள், வழிகாட்டல்கள் மற்றும் உலக நாடுகளின் கடந்த கால அனுபவங்களைக் கவனத்திலும் கணக்கிலும் எடுத்துச் செயற்பட்டிருந்தால் நாடு இன்று எங்கோ உயர்ந்த நிலையில் அமைதியும் சமாதானமும் பொருளாதாரச் செழுமையும் நிறைந்ததாக விளங்கியிருக்கும்.

இத்தகைய விடயங்களில் இனவெறி மூர்க்கத்தனத்தில் நடந்து கொள்ள ஆட்சித் தலைமையைத் தூண்டி வழிநடத்தி, சேர்ந்தியங்கி எல்லாவற்றையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிய பின்னர், இப்போது நல்ல பிள்ளைபோல – சாத்தான் வேதம் ஓதுவது போல, நிபுணத்துவ ஆலோசனையைக் கோருங்கள் என நல்லுபதேசம் செய்கின்றார் விமல் வீரவன்ஸ.

நிபுணத்துவ ஆலோசனையையே பெறாத அரசுக்கு முண்டு கொடுத்து இதுவரைக் காப்பாற்றியமைக்கும், இப்போது தொடர்ந்தும் காப்பாற்றியும் கொண்டிருக்கும் பெரும் அரசியல் தவறுக்காக இவருக்கும் இவரது அணியினருக்கும் முதலில் நாட்டு மக்கள் சரியான அரசியல் தண்டனை வழங்க வேண்டும். அப்படி வழங்கினால் பல திருத்தங்கள் தன்பாட்டில் அரசுக்குள் ஏற்படும்.



## உக்ரைனில் சிக்கியிருந்த 32 இலங்கையர்கள் மீட்பு

உக்ரைனில் இருந்து இதுவரை 32 இலங்கையர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

உக்ரைனின் 4 எல்லை நாடுகளின் ஊடாக அவர்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளது.

## இலங்கை மீனவர்களுக்கு மியன்மார் மன்னிப்பளிப்பு

மியன்மாருக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவும் சுமுகமான இருதரப்பு உறவுகளை நோக்காகக் கொண்டு, மனிதாபிமான அடிப்படையில் மியன்மார் வைரவிழா யூனியன் தினத்தை முன்னிட்டு, சிறையில் அடைக்கப்பட்டு தண்டனை அனுபவித்து வரும் ஏழு இலங்கை மீனவர்களுக்கு மியன்மார் யூனியன் குடியரசு அரசாங்கம் மன்னிப்பு வழங்கியுள்ளது.

மியன்மார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்ததால், ஏழு இலங்கை மீனவர்களுடன் கூடிய 'துன் புதா' என்ற இலங்கை மீன்பிடிக் கப்பல் மியன்மார் அதிகாரிகளால் 2021டிசெம்பர் 03 ஆம் திகதி பிடிக்கப்பட்டது. கெப்டனுக்கு ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட அதேவேளை, கப்பல் குழுவினருக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இலங்கை மீனவர்கள் யாங்கூனில் உள்ள இன்செயின் சிறையில் அடைக்கப்பட்டமையைத் தொடர்ந்து, அவர்களுக்குத் தேவையான கொன்ஸ்யூலர் உதவிகளை மியன்மாரில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் உதவியுடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஒருங்கிணைத்து உதவியது.

மியன்மார் அரசாங்கத்துடன் ஒருங்கிணைப்புடன், இலங்கை மீனவர்கள் ஏழு பேரும் 2022 மார்ச் 06ஆந் திகதி கட்டாய பி.சி.ஆர். பரிசோதனைகளை நிறைவு செய்து கொண்டு நாடு திரும்பவுள்ளனர்.



## 'முழுநாடும் சரியான பாதையில்' தேசிய விஞ்ஞாபனம் வெளியீடு

அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 11 அரசியல் கட்சிகளின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட தேசிய விஞ்ஞாபனம் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, தேசிய காங்கிரஸ், பிவித்துரு ஹெல உறுமய, ஸ்ரீலங்கா மஹஜன கட்சி, விஜய தரணி தேசிய சபை, ஐக்கிய மக்கள் கட்சி, கடமை தேசிய அமைப்பு போன்ற 11 அரசியல் கட்சிகளால் இது தயாரிக்கப்பட்டுள்ளது. முழு நாடும் சரியான பாதையில் என்று இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது.

### க.பொ.த.சாதாரணதர

## அழகியல் பெறுபேறுகள் இந்தவாரம் வெளியிடப்படும்

2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை அழகியல் பாடங்களுக்கான பெறுபேறுகள் இந்த வாரம் வெளிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்துள்ளார். அதன் பின்னர் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்று நிலைமை காரணமாக, க.பொ.த சாதாரண தர இசை, நடனம் மற்றும் நாடகம் ஆகிய பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் மேற்படி காலத்தினுள் நடத்தப்படவில்லை. அழகியல் பாடங்களுக்கான பெறுபேறுகள் இன்றி பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டன. அந்த பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் கடந்த டிசெம்பர் மாதம் நடத்தப்பட்டன. இந்தப் பாடங்களுக்கு ஒரு லட்சத்து 69 ஆயிரம் விண்ணப்பதாரர்கள் தோற்றியிருந்தனர். இதேவேளை, புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கார்கிவ் மீது ஷெல் தாக்குதல் 21 பேர் பரிதாபமாக உயிரிழப்பு



உக்ரைனின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நகரமான கார்கிவ் மீது ஷெல் தாக்குதலை ரஷ்ய படைகள் மேற்கொண்டுள்ளன.

குறித்த தாக்குதலில் குறைந்தது 21 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 112 பேர் காயமடைந்துள்ளனர் என்று நகர முதல்வர் தெரிவித்துள்ளார்.

செவ்வாய் முதல் இரவோடு இரவாக கார்கிவ் மீது கடுமையான குண்டுவீச்சுகள் நடத்தப்பட்ட போதிலும், அனைத்து ரஷ்ய தாக்குதல்களும் முறியடிக்கப்பட்டன என்றும் அவர் கூறினார்.

மேலும் குறித்த தாக்குதலில் ரஷ்யாவும் குறிப்பிடத்தக்க இழப்புக்களை சந்தித்தது என்றும் கார்கிவ் முதலவர் குறிப்பிட்டுள்ளார்.

## உக்ரைனில் கொத்துக் குண்டுகளை ரஷ்யா பயன்படுத்துகின்றதாம்

### குற்றச்சாட்டு முன்வைப்பு



தடை செய்யப்பட்ட ஆபத்தான கொத்துக் குண்டுகள் (cluster bombs) மற்றும் அணு குண்டுக்கு அடுத்து ஆபத்தானதாக கருதப்படும் வெப்ப அழுத்த வெடிகுண்டுகளை (thermobaric weapon) வீசி உக்ரேனியர்களை ரஷ்ய கொன்று குவிப்பதாக அமெரிக்காவிற்கான உக்ரைனின் தூதுவர் நேற்று தெரிவித்தார்.

அத்துடன், பல்வேறு சர்வதேச மனித உரிமைக்குழுக்களும்ரஷ்யாமீதுகுற்றச்சாட்டுக்களை முன்வைத்தமையுடன், கடும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளன.

சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International) மற்றும் மனித உரிமை கண்காணிப்பகம் (Human Rights Watch) ஆகிய இரண்டு அமைப்புக்களும் ரஷ்யப் படைகள் பரவலாக தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகளை பயன்படுத்தின எனத் தெரிய வருவதாகக் கூறியுள்ளன.

வட-கிழக்கு உக்ரைனில் பொதுமக்கள் தஞ்சமடைந்திருந்த பாலர் பாடசாலை ஒன்றின் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியது.

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களை நேற்று சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்காவுக்கான உக்ரைன் தூதர் ஒக்ஸானா மார்கரோவா, உக்ரைனில் ரஷ்யா அணுகுண்டுக்கு அடுத்தபடியாக மிக மோசமான அழிவை ஏற்படுத்தக் கூடியது எனக் கருதப்படும் தெர்மோபாரிக் எனப்படும் வெப்ப அழுத்த வெடிகுண்டுகளை (thermobaric weapon) வீசி உள்ளதாகத் தெரிவித்தார்.

தெர்மோபாரிக் வெடிகுண்டுக்குள் உள்ள அமிலம் மற்றும் எரிபொருள் கலவை வெடித்தால் வெப்ப அலைகள் உருவாகி குண்டு விழும் பகுதிகளில் உள்ள மனிதர்கள், கட்டடங்கள் அனைத்தும் அழிந்துவிடும் எனக் கூறப்படுகிறது.

தெர்மோபாரிக் குண்டு வெடிக்கும் பகுதியை சுற்றியுள்ள பகுதிகளில் காற்றிலிருந்து ஒட்சிசன் உறிஞ்சப்படும். இது பெரும் அழிவுகளை உண்டாக்கும் திறன் கொண்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.



எனினும் உக்ரைனில் நடந்த மோதலில் தெர்மோபாரிக் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன என அதிகாரப்பூர்வ உறுதிப்படுத்தல் எதுவும் இல்லை. சனிக்கிழமை பிற்பகல் உக்ரேனிய எல்லைக்கு அருகில் ரஷ்யா பயன்படுத்தியதாக நம்பப்படும் தெர்மோபரிக் பல்குழல் ஏவு கருவியை (thermobaric multiple rocket launcher) தனது குழு ஒன்று கண்டதாக சி.என்.என். ஊடகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தெர்மோபரிக் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன என வெளியாகும் செய்திகளை தாம் பார்த்தேன் எனவும் ஆனால் ரஷ்யா அத்தகைய ஆயுதங்களைப் பயன்படுத்தியதாக உறுதிப்படுத் தப்படவில்லை எனவும் வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி தெரிவித்தார்.

அது உண்மையாக இருந்தால், அது ஒரு போர்க்குற்றமாக இருக்கும் என்று ஒரு செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறினார்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து கருத்துக் கேட்டபோதும் வொஷிங்டனில் உள்ள ரஷ்ய தூதரகம் பதிலளிக்கவில்லை என ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

## அணு ஆயுதப்போர் தொடர்பாக அமெரிக்கர்கள் கவலை வேண்டாம்



### பைடன் தெரிவிப்பு

அணு ஆயுதப் போர் குறித்து அமெரிக்கர்கள் கவலைப்படத் தேவையில்லை என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு போருக்கு எதிராக மேற்கத்தைய நாடுகள் கடும் நடவடிக்கைகளை எடுத்துவரும் நிலையில் ரஷ்ய இராணுவத்தின் அணு ஆயுதப்படை பிரிவை விசேட எச்சரிக்கையுடனான தயார் நிலையில் இருக்குமாறு அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின்உத்தரவிட்டுள்ளார்.

மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவை நோக்கி மோசமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. மேலும் சட்ட விரோதமான தடைகளையும் விதித்துள்ளன. இதற்கான எதிர்வினை குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என்றும் புடின் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் அணு ஆயுத யுத்தம் குறித்து அமெரிக்கர்கள் கவலைப்படத் தேவையில்லை என ஜனாதிபதி ஜோ பைடன் கூறினார்.

அதேவேளை, அமெரிக்கா தனது அணு ஆயுத படைப் பிரிவை எச்சரிக்கை நிலையில் வைப்பதற்கான தேவை எதுவும் தற்போதைய சூழலில் இல்லை என வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலாளர் ஜென் சாகி தெரிவித்தார்.

அணு ஆயு தப் படைப் பிரிவினை உச்ச தயார் நிலை வைக்கு மாறு ரஷ்ய ஜனாதிபதி புடின் இட்டுள்ள கட்டளை குறித்து நாங்கள் மதிப்பிட்டு வரு கிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவோ அல்லது 30 நாடுகளைக் கொண்ட நேட்டோ கூட்டணியோ ரஷ்யாவுடன் மோதலுக்கு விரும்பவில்லை என்று சாகி கூறினார்.

அணு ஆயுதங்கள் தொடர்பாக இது போன்ற ஆத்திரமூட்டும் புடினின் சொல்லாட்சி ஆபத்தானது. இது தவிர்க்கப்பட வேண்டும் எனவும் ஜென் சாகி குறிப்பிட்டார்.

இதற்கிடையே, அணு ஆயு தங்களை பயன்படுத்துகின்றமை பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தும் என்று ரஷ்யாவும் அமெரிக்காவும் நீண்டகாலமாக ஒப்புக் கொண்டுள்ளன என வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அணு ஆயுத யுத்தத்தில் யாரையும் யாரும் வெல்ல முடியாது. ஒருபோதும் அணு ஆயுதப் போரில் ஈடு படக் கூடாது என்பதை உறுதிப்படுத்தும் கூட்டு அறிக்கைகளில் ரஷ்யா கையெழுத்திட்டுள்ள தாக வெள்ளை மாளிகை சுட்டிக்காட்டியுள்ளது.

# உக்ரைன் விடயத்தைக் கூட அரசியல் ஆதாயமாக்கும் மோடி
# தமிழக காங்கிரஸ் தலைவர் அழகிரி காரசார குற்றச்சாட்டு



உக்ரைனில் சிக்கித் தவிக்கும் இந்தியர்கள் தொடர்ந்து சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வரும் நிலையில், இந்திய அரசின் தெளிவான அணுகுமுறை இல்லாத காரணத்தால் பதற்றமான சூழ்நிலை அங்கே உருவாகி வருகிறது, என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி தெரிவித்திருக்கிறார்.

உக்ரைனிலுள்ள இந்தியர்களை மீட்கும் முயற்சியில் இந்திய அரசின் அணுகுமுறை ஏமாற்றமளிப்பதாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

கர்நாடகத்தைச் சேர்ந்த மருத்துவக் கல்லூரி மாணவர் உட்பட இருவர் இதுவரை பலியாகி இருக்கிறார்கள்.

எஞ்சியிருக்கும் இந்தியர்கள் அங்கிருந்து எப்படித் தப்பித்து வெளியேற்றுவது என்று தெரியாமல் மிகுந்த வேதனையுடன் இருக்கிறார்கள். உக்ரைனில் சிக்கித்தவிக்கும் இந்தியர்களுக்கு அங்குள்ள இந்தியத் தூதரகம் எந்த உதவியும் செய்யவில்லை. மாறாக, உக்ரைன் நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான கார்கிவ்வில் இந்திய மாணவர்களில் பெரும்பாலானவர்கள் இருக்கிறார்கள்.

அவர்களை அங்கே இருக்கிற இந்தியத் தூதரகம் குறைவான அவகாசம் வழங்கி அனைவரும் வெளியேறும்படி அறிக்கை வெளியிட்டிருக்கிறது. இது அங்கே இருக்கிற நூற்றுக்கணக்கான மாணவர்களிடையே கோபத்தையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தி இருக்கிறது. போர் தொடங்கப்பட்டு இவ்வளவு நாள்களான பிறகும் கூட தெளிவான முடிவெடுக்காமல், திடீரென அவர்களையெல்லாம் வெளியேறி குறிப்பிட்ட இடத்திற்கு செல்லும்படி கூறுவது எந்த வகையில் சாத்தியம் என்று தெரியவில்லை. இந்த அறிவிப்பினால் மீண்டும் ரஷ்யாவின் தாக்குதல் எந்த நேரத்திலும் ஏற்பட்டு விடுமோ என்கிற அச்சம் அவர்களை வாட்டி வதைத்து வருகிறது.

உக்ரைனில் சிக்கித் தவித்து வருகிற இந்தியர்களில் பலர் ருமேனிய எல்லை பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்ட வீடியோ பதிவு சமூக ஊடகங்களில் வெளிவந்துள்ளது.

அவர்களை வெளியேற்றுவதற்கு இந்திய அரசு எந்த முன்னேற்பாடுகளையும் செய்யவில்லை. உக்ரைன் எல்லையை விட்டு வெளியே போங்கள் என்று மட்டுமே இந்திய தூதரகம் சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால், எல்லையில் இருந்து 800 கி.மீ. தொலைவில் உள்ளவர்கள் எந்தவித போக்குவரத்து வசதியும் இல்லாமல், எப்படி செல்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பலர் ரயில் நிலையங்களில் இரண்டு, மூன்று நாட்களாக காத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு உணவோ, மற்ற பொருள்களோ வாங்க எந்த கடையும் திறக்கவில்லை. இந்நிலையில், அவர்களிடம் இந்திய தூதரகம் எந்தவிதமான தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்ளாமல் செயலற்று கிடக்கிறது. இதன் மூலம் உக்ரைனில் சிக்கித் தவித்து வருகிற ஆயிரக்கணக்கான மாணவர்களை காப்பாற்றி இந்திய நாட்டிற்கு அழைத்து வருகிற முயற்சிகள் பெரும் தோல்வியை சந்தித்துள்ளன.

ஆனால், பிரதமர் மோடி உக்ரைனில் இருந்து இந்தியர்களை மீட்க முடிந்ததற்கு இந்தியாவின் ஆற்றலே காரணம் என்று பெருமிதப்பட்டுக் கொள்வதன் மூலம் தேர்தல் பரப்புரையில் இறங்கியிருக்கிறார். இதைக்கூட அரசியல் ஆதாயத்திற்காக பிரதமர் மோடி பயன்படுத்துவது அவரது அரசியல் சிறுமைத்தனத்தைத் தான் காட்டுகிறது.

பரந்த மனப்பான்மையோடு செயல்பட வேண்டிய பிரதமர் மோடி, தேர்தல் அரசியலுக்காக இதை பயன்படுத்திக் கொள்வது வன்மையான கண்டனத்திற்குரியது.

எனவே, உக்ரைனில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிற இந்தியர்களை பாதுகாப்பதற்கு மோடி அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## டாஸ்மாக் மதுக்கடைகளை மக்கள் ஆட்சேபிக்கலாம் தமிழக அரசு புதிய சட்டத்திருத்தம் கொண்டுவந்தது

தமிழக அரசினால் நடத்தப்படும் மது விற்பனை நிலையங்களான டாஸ்மாக் கடைகளை அமைக்க மக்கள் எதிர்ப்பு தெரிவித்தால், அதை மாவட்ட ஆட்சியர் கண்டிப்பாகப் பரிசீலிக்கும் வகையில் தமிழக அரசு விதிகளில் திருத்தம் கொண்டு வந்துள்ளது.

டாஸ்மாக் கடைகள் திறப்பதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்தால் அந்த ஆட்சேபனைகளைப் பரிசீலித்து தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்காமல் எந்த டாஸ்மாக் கடைகளையும் திறக்க அனுமதி வழங்கக் கூடாது என மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

மேலும் மாவட்ட ஆட்சியர்களின் முடிவை எதிர்த்து 30 நாள்களுக்குள் மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையருக்கு மேல்முறையீடு செய்யவும் திருத்த விதிகளில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாருக்கு நிபந்தனையுடனான பிணை கிடைத்தது



கள்ள வாக்கு அளிக்க வந்தார் எனத் தெரிவித்து ஒரு நபரைத் தாக்கிய வழக்கில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக் குமாருக்கு சென்னை உயர் நீதிமன்றம் நிபந்தனைப் பிணையினை வழங்கியுள் ளது.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலின்போது கள்ள வாக்களிப்பு பிரச்சினை தொடர்பாக தி.மு.க.- அ.தி.மு.கவினரிடையே தகராறு ஏற்பட்டது. அப்போது அங்கு வந்த அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் மற்றும் கட்சி நிர்வாகிகள், தி.மு.க. தொண்டரென தெரிவிக்கப்படும் நரேஷ் குமார் என்பவரை பிடித்து அவரது சட்டையை கழற்றி ஊர்வலமாக அழைத்துச்சென்று பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இதற்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இது தொடர்பான புகாரின் பேரில் பொலிஸார் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் உள்பட 40 பேர் மீது 10 பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கில் ஜெயக்குமார் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இவரது பிணை மனுவை முதன்மை நீதிமன்றம் தள்ளுபடி செய்த நிலையில், உயர்நீதிமன்றத்தில் அவர் பிணை மனுவைத் தாக்கல் செய்தார். இன்று பிணை மனு விசாரணை நடைபெற்றபோது, ஜெயக்குமாரால் தாக்கப் பட்டார் எனத் தெரிவிக்கப்பட்ட நபர் குணமடைந்து வீட்டிற்குச் சென்றுவிட்டார் எனப் பொலிஸாரார் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர், நீதிமன்றம் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாருக்கு நிபந்தனை பிணையை வழங்கி உத்தரவிட்டது.

திருச்சியில் தங்கி பொலிஸ் நிலையத்தில் இரண்டு வாரங்கள் கையெழுத்திட வேண் டும் என்ற நிபந்தனையுடன் அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. ஜெயக்குமார் மீது பதியப்பட்ட மூன்று வழக்குகளில் இரண்டில் அவருக்குப் பிணை கிடைத்துள்ளது.





## மாணவர்கள் பணயக்கைதிகளாக பிடிக்கப்படவில்லை இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவிப்பு

உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து எட்டாவது நாளாக தாக்குதலைத் தொடர்கிறது. நேற்று உக்ரைனின் கிழக்குப் பகுதியான கார்கீவ் நகரை பிடிக்கும் வகையில் ரஷ்ய இராணுவம் தாக்குதலை அதிகப்படுத்தியது.

கீவ் நகரில் இருந்து இந்தியர்கள், இந்திய மாணவர்கள் முழுமையாக வெளியேற்றப்பட்டனர் எனக் கூறப்படும் நிலையில் கார்கீவ் நகரில் இருந்தும் உடனடியாக மேற்கு பகுதிக்கு ரயில்கள் மூலம் வெளியேறும்படி இந்தியர்களுக்கு தூதரகம் அறிவுறுத்தியது.

ஐ.நா.வில் இந்தியா உக்ரைனுக்கு ஆதரவாக வாக்களிக்காததால் இந்திய மாணவர்கள் கார்கிவ் நகரின் மீது தாக்குதல் நடத்தப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில், நேற்று உக்ரைன் விவகாரம் தொடர்பாக ரஷ்ய அதிபர் புடினுடன் தொலைபேசி மூலம் உரையாடிய இந்தியப் பிரதமர் மோடி, கார்கிவ் நகரில் உள்ள இந்திய மாணவர்களை வெளியேற அனுமதிக்க வேண்டும் என்றும், இந்தியர்கள் பத்திரமாக தாயகம் திரும்ப ரஷ்ய இராணுவம் உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருந்தார். இந்த நிலையில், கார்கீவ் நகரை தாம் முற்றுகையிட்டு நுழைந்துள்ள நிலையில், உக்ரைன் இராணுவம் இந்திய மாணவர்களை பணயக் கைதிகளாக பிடித்து வைத்துள்ளதாக ரஷ்யத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

ஆயினும், அப்படி எந்தத் தகவலும் தமக்குக் கிடைக்கப்பெறவில்லை என இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் அரிந்தன் பாக்சி தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் உள்ள இந்திய தூதரகம் அங்குள்ள இந்தியர்களுடன் தொடர்ந்து தொடர்பில் உள்ளது. உக்ரைன் அதிகாரிகளின் ஒத்துழைப்போடு பல மாணவர்கள் நேற்று கார்கீவ் நகரை விட்டு வெளியேறினர். அங்கு இந்திய மாணவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர் என எந்த தகவலும் எங்களுக்கு கிடைக்கவில்லை.

கார்கீவ் மற்றும் அண்டைப் பகுதியில் இருந்து மாணவர்களை நாட்டின் மேற்கு பகுதிக்கு அழைத்துச் செல்ல சிறப்பு ரயில்களுக்கு ஏற்பாடு செய்வதில் ஆதரவு அளிக்குமாறு உக் ரைன் அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைத்திருக்கிறோம். ரஷ்யா, ருமேனியா, போலந்து, ஹங்கேரி, சுலோவாக்கியா மற்றும் மோல்டோவா உள்ளிட்ட நாடுகளுடன் நாங்கள் ஒருங்கிணைந்து செயலாற்றி வருகிறோம்.

சில நாள்களாக உக்ரைனில் இருந்து ஏராளமான இந்தியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இதை சாத்தியமாக்கிய உக்ரைன் அதிகாரிகளின் உதவியை நாங்கள் பாராட்டுகிறோம். உக்ரைனின் மேற்கத்திய அண்டை நாடுகள் இந்தியர்களை தங்கள் நாட்டுக்குள் அழைத்துவந்து அவர்கள் விமானங்களுக்கு காத்திருக்கும் வகையில் இடமளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறோம், என்று அவர் தெரிவித்திருக்கிறார்.





# திராய்க்கேணி தமிழ்க் கிராமத்தின் பாரம்பரிய கேணி பறிபோகின்றது

## கேட்பார், தடுப்பார் இல்லையா எனப் பொது அமைப்புகள் போர்க்கொடி!

(காரைதீவு நிருபர் சகா)

திராய்க்கேணி தமிழ்க் கிராமத்தின் பாரம்பரிய சலவைத்தொழிலுக்கான நீர்நிறைந்த கேணியை எவ்வித அனுமதியும் இல்லாமல், தம்மிஷ்டப்படி அட்டாளைச்சேனை பிரதேசசபைத் தவிசாளர் அத்துமீறி மூடிவருகின்றார் என பொதுநலஅமைப்புகள் பரவலாக முறையிட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவினுள் வருகின்ற ஒரேயொரு தமிழ்க் கிராமம் திராய்க்கேணிக் கிராமமாகும். இக்கிராம மக்கள் கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில், இன வன்முறையால் துவம்சம் செய்யப்பட்டு மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்துவருகின்றனர். பரம்பரை பரம்பரையாக இக்கேணியில் தமது சலவைத் தொழிலைச் செய்துவருகின்ற இந்நிலையில், அப்பகுதி தவிசாளர் இவ்விதம் அராஜமாகச் செயற்படுகின்றார் என அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். பாதிக்கப்பட்ட தமிழர் என்ற வகையில் எமக்குக் குரல் கொடுக்க, உதவி செய்ய, நீதி கேட்க யாருமில்லையா என்றும் அவர்கள் அவலக்குரல் எழுப்புகின்றனர். கேட்பார், பார்ப்பார் இல்லையா? என திராய்க்கேணி பொதுநல அமைப்புகள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

திராய்க்கேணி பெரியதம்பிரான் கோயில் பரிபாலனசபையினர், இந்த அத்துமீறி மண்நிரப்பும் செயற்பாடு குறித்து அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தொடக்கம் அட்டாளைச்சேனை பிரதேசசெயலாளர் வரை எழுத்துமூலம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

ஆலய பரிபாலனசபைத்தலைவர் சி.கார்த்திகேசு மற்றும் செயலாளர் கி.புவனேஸ்வரன் இணைந்து முறையிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திராய்க்கேணி பாலமுனை 06ஆம் பிரிவுக்குட்பட்ட ஸ்ரீ பெரியதம்பிரான் ஆலய பரிபாலன சபையினரின் கீழ் பராமரிக்கப்பட்டுவந்த சலவைத் தொழிலாளருக்குரிய குளத்தையும், சலவைத்தொட்டி உள்ள கட்டடத்தையும் - மாரி காலங்களில் குளத்திலும் கோடைகாலத்தில் கட்டடத்திலுமாக - அவர்கள் பரம்பரை பரம்பரையாக வேலை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், ஆலய நிருவாக சபையினரிடமோ அல்லது சலவைத் தொழிலாளிகளிடமோ எவ்வித அனுமதியுமின்றி எமது நிலத்திலுள்ள குளத்தை ஒலுவிலைச்சேர்ந்த அட்டாளைச்சேனை பிரதேசசபைத் தவிசாளர் எ.எல்.அமானுல்லா என்பவர் கனரக வாகனங்களின் உதவியுடன் மண்போட்டு மூடிக்கொண்டுவருகின்றார். அவரது இந்த அராஜகச் செயலை உடனடியாகத் தடுத்துநிறுத்தி, எமது பாரம்பரிய சலவைத்தொழிலை தொடர்ந்து செய்வதற்கு ஆவன செய்யுமாறு வேண்டுகிறோம். - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எமக்கான நீதி கிடைக்காவிட்டால் நாம் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தவும் பின்னிற்கமாட்டோம். எம்மிடம் வாக்குப்பெற்ற அரசியல்வாதிகள் எமக்காக இத்தருணத்தில் நீதிக்காக குரல் கொடுக்கத்தவறினால் இனிமேல் எமது வாக்குகளை இழக்க நேரிடும் என்பதையும் தெரிவிக்கின்றோம்.- என அவர்கள் கூறுகின்றனர்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்தமைக்காக கைது செய்யப்பட்டவர்களின் வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு கிரான் நாகவத்தை கடற்கரை காணியொன்றில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டவர்களின் வழக்கு நேற்று வாழைச்சேனை நீதிவான் எச்.எம்.எம்.பசில் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபரின் ஆலோசனை இன்னும் கிடைக்கப் பெறாத காரணத்தினால் எதிர்வரும் ஜூன் 06 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இரு பெண்கள் உட்பட பத்துப் பேர் கடந்த ஆண்டு மே 15 ஆம் திகதியன்று கல்குடா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர். பின்னர் நீதிமன்றின் கட்டளைக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த டிசெம்பர் 8 ஆம் திகதியன்று வாழைச்சேனை நீதிவான் எச்.எம்.எம்.பசில் முன்னிலையில் இவர்களது வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய நிபந்தனைகளுடன் அவர்கள் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கிது.

ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் பொலிஸ் நிலையம் சென்று கையொப்பமிடல் வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்டையில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். இவ் வழக்கில் கைது செய்யப்பட்ட 10 பேரில் குருசுமுத்து விமலசேன (வயது 68) என்பவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துவிட்டார். ஏனைய 9 பேரும் நேற்று மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

நேற்று இவ் வழக்கில் சட்டத்தரணிகளான எம்.எச்.எம்.றம்சீன், ஹாலிப் றிபான் ஆகியோர்கள் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் அனுசரணையில் முன்னிலையாகியிருந்தனர்.

# தடையை மீறி P2P பேரணி சென்ற வழக்கின் விசாரணை ஒத்திவைப்பு

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரணியில் கலந்து கொண்டமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பொத்துவில் நீதிவான் நீதிமன்றத்தினால் நேற்றைய தினம் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் ஒத்திவைக்கப்பட்டது..

கடந்த 2021 பெப்ரவரி, 03ஆம் திகதி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில் நீதிமன்றத் தடையுத்தரவை மீறி கலந்து கொண்டமைக்காக பொத்துவில் மற்றும் திருக்கோவில் பொலிஸாரால் 32 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கு இரண்டாவது தவணையாக நேற்றைய தினம் விசார ணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரதிவாதிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி முனாஸ் மற்றும் சட்டத்தரணி நவம் கமலதாஸ் ஆகியோர் தமது பக்க சமர்ப்பணங்களைச் செய்திருந்தனர். பொலிஸாரினால் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் (ஜனா), தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர் இரா.சயனொளிபவன் உள்ளிட்ட சிலர் முன்னிலையாகியிருந்த நிலையில் வழக்கு விசாரணை 2022 ஜூன் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# 9 மாத விளக்கமறியலின் பின்னர் முன்னாள் போராளிக்குப் பிணை

முகநூல் பதிவு தொடர்பில் பயங்கரவாதத்தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் போராளியும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளருமான நாகராசா பிரதீபன் கடந்த திங்கட்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த 2021 ஜூன் மாதமளவில் முகநூல் பதிவு தொடர்பில் இவர் பங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் களுவாஞ்சிக்குடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 9 மாதங்களாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார். கடந்த திங்கட்கிழமை இவர் தொடர்பான வழக்கு விசாரணை களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றிருந்தவேளை இவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28ம் திகதி மீண்டும் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

# சாய்ந்தமருது கூட்டத்தில் நாளை அநுர குமார உரையாற்றுவார்



தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றின் தலைவர் அநுர குமார திசாநாயக நாளை வெள்ளிக்கிழமை கல்முனை பிராந்தியத்திற்கு விஜயம் செய்யவுள்ளார். சாய்ந்தமருது லீ மெரீடியன் வரவேற்பு மண்டபத்தில் மாலை 5 மணிக்கு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சீரழிந்த தாயகத்தைக் கட்டியெழுப்பும் தீர்வு எனும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் உரையாற்றவுள்ளார்.

நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெற்று வரும் பிரசார நிகழ்வின் ஒருபகுதியாக நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியற்றின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

# யாழ். பல்கலை 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாக் காட்சிகள்

















# யாழ். பல்கலை 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாக் காட்சிகள்




















# வழமைபோன்று எரிபொருள் இன்று முதல் வழங்கப்படும்!

## அரசு அறிவிப்பு

இன்று (வியாழக்கிழமை) முதல் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் எரிபொருள் விநியோகம் வழமை போன்று இடம்பெறும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, அச்சமடைந்து எரிபொருள் சேகரிப்பதைத் தவிர்க்குமாறு அரசாங்கம் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

நாடளாவியரீதியில்உள்ளஎரிபொருள் நிரப்பு நிலையங்களில் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், இன்றைய தினத்தின் பின்னர் அது வழமைக்குத் திரும்பும் எனவும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

தாமதமின்றி எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த 37 ஆயிரத்து 300 மெற்றிக் தொன் டீசல் தொகை இன்று பிற்பகல் தரையிறக்கப்படவுள்ளது.

இதன்படி, மின் உற்பத்திக்காக சுமார் 8 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் வழங்கப்படவுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இன்றும் நாடு முழுவதும் 7 மணித்தியாலங்கள் 30 நிமிடம் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை 5 மணி நேரமும், மாலை 6 மணி முதல் இரவு 8.30 மணி வரை 2 மணி நேரம் 30 நிமிடங்களும் மின் தடை அமுல்படுத்தப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், எதிர்வரும் ஐந்து நாள்களுக்கு பின்னர் எவ்வித வெட்டுமின்றி மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக பொதுப்பயன்பாடுகள்ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இதேவேளை, கடந்த டிசெம்பர் 03 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்வெட்டு தொடர்பில் இன்று முதல் முறையாக மக்களிடம் கலந்தாய்வு நடைபெறவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின் தடைக்கான காரணத்தைக் கண்டறிவதே இதன் நோக்கம் என பொதுப்பயன்பாடுகள்ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை விரைவுபடுத்த அமைச்சரவை உப குழு!

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை விரைவுபடுத்துவதற்காக 5 அமைச்சர்கள் அடங்கிய அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் 70 வீதமான மின்சாரத்தை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து உற்பத்தி செய்ய வேண்டும் என்ற அரசின் கொள்கை நோக்கங்களை அடைவதற்கும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களைத் துரிதப்படுத்துவதற்காகவும், 5 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை உப குழு அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, நீதி அமைச்சர் அலி சப்றி ஆகியோர் இந்த அமைச்சரவை உப குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அமைச்சரவை உபகுழுவின் தலைவராகநெடுஞ்சாலைகள்அமைச்சர்ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்பொழுது அடையாளங் காணப்பட்டுள்ள புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு ஆர்வமுள்ள முதலீட்டாளர்களில் தகுதியானவர்களைத் தெரிவு செய்தல், உயர்ந்த பயனுள்ள திட்டங்களை அடையாளங் காணுதல், திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக அமுலிலுள்ள சட்டங்கள் மற்றும் தடைகளை அடையாளங்கண்டு நீக்குதல், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களினூடாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தேசியக் கட்டமைப்புடன் இணைப்பதற்கான வசதிகளை மேம்படுத்துதல் என்பன தொடர்பாகவும் உப குழு கவனம் செலுத்தும்.

இந்த உபகுழுவின் நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் பற்றிய அறிக்கை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.



# டக்சன் பியூஸ்லஸ் மரணம்; விசாரணை வேண்டும்

## செல்வம் எம்.பி கோரிக்கை

தேசிய கால்பந்தாட்ட வீரர் யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ் மரணத்தின் உண்மைத் தன்மை தொடர்பான விசாரணை உரிய முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் .ஜீ.எல். பீரிஸ்'க்கு நேற்று (புதன்கிழமை) அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில் -

மன்னார் மாவட்டத்தின் பனங்கட்டு கொட்டு கிழக்கு கிராமத்தைத் தனது பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவர் தேசிய கால்பந்தாட்ட வீரர் யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ்.

இவர் 2018 முதல் இன்று வரை இலங்கையின் தேசிய கால்பந்து அணி வீரராக இருந்து வருகிறார்.

தனது விளையாட்டுத் திறமையால் பல சாதனை களைப் படைத்த ஒரு சிறந்த வீரன். இந்த விளையாட்டு துறையில் தன்னை முற்றும் முழுவதுமாக ஈடுபடுத்தி தன்னை வளர்த்துக் கொண்டு தனது மாவட்டத்துக்கும், தாய் நாட்டுக்கும் புகழைத் தேடித் தந்தவர். தன்னை முழுவதுமாக கால்பந்துக்காக அர்ப்பணித்த வீரன்.

அவருடைய விளையாட்டு திறமையின் நிமித்தம் மாலை தீவுக்கு வலன்சியா விளையாட்டு கழகத்தினரால் அழைக்கப்பட்டு அந்தக் கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடி அங்கும் பல சாதனைகள் படைத்து பல வெற்றிக்கு வழி வகுத்தவர்.

இவ்வாறானதோர் சிறந்த விளையாட்டு வீரனின் அகால மரணம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

அவருடைய மரணம் கொலையா? என்ற சந்தேகத்தையும் எல்லோர் மட்டிலும் எழுப்பியுள்ளது.

எனவே இவ்வாறான ஓர் அகால மரணத்துக்கான காரணத்தை ஆராய்ந்து விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை ஆவணப்படுத்துமாறு குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். - என அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி – பரந்தன் பகுதியில் பொலிஸ் காவலரண் அமைப்பு!

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் அண்மைக்காலமாக இரவு வேளைகளில் பல்வேறு வகையான குற்றச் செயல்கள் கொலை மற்றும் ஆள் மிரட்டல் திருட்டுச் சம்பவங்கள் எனப் பல்வேறு விதமான சட்ட விரோத செயல்கள் இடம்பெறுகின்றன என பல முறைப்பாடுகள் தொடர்பாகப் பொலி ஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய நேற்று (புதன்கிழமை) குறித்த பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்டுள்ளது. குறித்த காவ லரண் 24 மணி நேரமும் செயற்படும் எனவும், அப்பகுதியில் குற்ற செயல்கள் இடம்பெறாமல் கட்டுப்படுத்த முடியும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



அண்மையில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட இந்தியாவின் துணைத் தூதருக்கும் அவரின் பாரியாருக்கும் நேற்று (புதன்கிழமை) இந்திய துணைத் தூதரகத்துக்குச் சென்று தனது வாழ்த்துக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

# ரயிலில் பாய்ந்து பெண் தற்கொலை

மாதம்பே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 43 3/4 மைல் தூணுக்கு அருகில் பெண் ஒருவர் ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். சிலாபத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலில் பாய்ந்து அந்தப் பெண் தற்கொலை செய்துகொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பலியானவர் 45 முதல் 50 வயது மதிக்கத்தக்கவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மாதம்பே பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.03.2022இல் வெளியிடப்பெற்றது.